www.tamilarangam.net

# மண்

கலை
இலக்கிய
சமூக
மாத இதழ்

...வது ஆண்டு சிறப்புமலர்
09.01.1993 கலை விழாவில்
வெளிவருகின்றது.



இதழ் 36

தை 1993
JANUARY

RAYA
87 ... DE COLOMBES
92600 ASNIERES SUR -
FRANCE

KULTIVIERUNG FÜR FRIEDLICHE ZUKUNFT

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தனி ஒரு மனிதனுக்கு உணவில்லை எனில்
இந்த ஜெகத்தினை அழித்திடுவோம்

ஒன்றே பலம்

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

ஒன்றே குலம் ஒருவனே தேவன்

கூடி வாழ்ந்தால் கோடி நன்மை

ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்

ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்

# மண்

அரசியல், சமய
சார்பற்றது

வாசிப்பதனால் மனிதன்
பூரணமடைகிறான்

இது ஒரு இலவச வெளியீடு.

இவ்விதழை ஏனையோருக்கும்
கொடுத்து உதவுங்கள்.

www.tamilarangam.net




வாசக உள்ளங்களுக்கு
அன்பு கனிந்த
புதுவருட – தைப்பொங்கல்
வாழ்த்துக்களை
தெரிவித்துக்கொள்கின்றோம்.

எமது சொந்த மண்ணையும் இந்நாளில்
நினைவு கூருவோம்.



www.tamilarangam.net

# எங்கள் கருத்து.

எமது சஞ்சிகை 3வது வருட நிறைவை இ
மாதம் நிறைவு செய்கின்றது என்பதை மகிழ்வுடன் தெரிவித்
கொள்கின்றது. வாசகர்கள், ஆக்கதாரர்கள், சஞ்சிகையாளர்க
பொதுப்பணியாளர்கள் யாவரும் தொடர்ந்து எமக்கு அளித்
வரும் ஒத்துழைப்பால் நாம் இந்தப் பணியை தொடர்ந்து மே
கொள்ள இருந்துள்ளது என்பதை தெரிவித்துக் கொள்வதுடன்
சகலருக்கும் நன்றியைத்தெரிவித்துக் கொள்கின்றோம்.

இச்சஞ்சிகை தொடர்ந்து வெ
வர நிதியுதவி புரிந்துவரும் நிறுவனங்களான ஜேர்மன் செஞ்சி
லுவைச்சங்கம் டியக்கோனி அமைப்பினருக்கு எமது சஞ்சிகை
நன்றியை தெரிவிப்பதுடன் மண் சஞ்சிகை ஆலோசனைக்கு
உறுப்பினர்கள் சஞ்சிகையில் வெளிவரும் போட்டிகளுக்கு நி
உதவி புரிபவர்கள். டியுஸ்பேர்க் வாழ் பொதுமக்களுக்குப்
நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

மண் சஞ்சிகை கடந்த
காலங்களில் பெரிய அளவில் சேவை செய்யாவிடினும் இங்
வாழ் சிறுவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உறுதுணையாக நின்று
வருவதை நீங்கள் அறிவீர்கள். அத்துடன் பல வாசகர்களைய
ஆக்கதாரர்களையும் உருவாக்கியிருக்கிறோம். என்றால் மிகை
யாகாது.

நாம் எமது சொந்த மண்ணில் அவலப்படும் அநாதை
சிறுவர்களுக்கென ஒரு திட்டத்தை செயற்படுத்தி வருகின்
றோம். இதுவரை 5 ஆயிரம் ஜே. மார்க்கிற்கு மேல் அநாதை
இல்லங்களுக்கு அனுப்பியுள்ளோம். இதற்கு தாராளமன
கொண்ட அன்பர்களின் உதவியால் இச்சேவையைச் செய்தோ
செய்து வருகின்றோம். எதிர்காலத்தில் அதுசெய்வோம் இது
செய்வோம் என்று பட்டியல் போட்டுக் கூறாவிட்டாலும் ஏதே
எம்மால் இயன்றதை நல்லதை செய்வோம் என்பதை தெளிவ
படுத்துகிறோம்.

இந்த 3வது ஆண்டு நிறைவில் சகல தர
பினருக்கும் நன்றியை தெரிவிப்பதுடன் எமது நாட்டிலும்
அமைதி நிலவவேண்டும். மக்கள் மனிதராக வாழ வேண்டும்
பசி பட்டினி ஒழிய வேண்டும் எனக்கூறி யாவரிடமும் ஒற்று
மையான ஒத்துழைப்பை நாடிநிற்கிறோம்.

— நன்றி —

மண் சஞ்சிகை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அறிவித்தல் 1

எமது சஞ்சிகை தொடர்ந்து மலர நிதி உதவி புரிந்து வரும் ஜேர்மன் செஞ்சிலுவைச் சங்கம், டியக் கோனி அமைப்புக்களில் நிதி நெருக்கடி நிலவுவதாலும் இந்த அமைப்புகள் மேலும் பல வறிய நாடுகளுக்கு உதவ வேண்டிய இருப்பதாலும் எமக்கு தொடர்ந்து நிதியுதவி புரிய மறுத்துள்ளதை வாசகர்களுக்கு அறியத்தருகின்றோம்.எனவே எமது சஞ்சிகை 1993 தொடக்கம் மாத வெளியீடாக வராது என்பதையும் இருமாதங்களுக்கு ஒன்றாக வெளிவரும் என் பதை வருத்தத்துடன் அறியத்தருகின்றோம்.

வேறு தாபனங்களிலிருந்து நிதி உதவி கிடைத்தால் மாதவெளியீடாக வரலாம் என்பதை யும் தெரிவிக்கின்றோம்.

ஆசிரியர்.
மண் சஞ்சிகை

# அறிவித்தல் 2

மண் சஞ்சிகையின் 3 வது ஆண்டு நிறைவு விழா நாம் ஏற்கனவே குறிப்பிட்டபடி 16.01.93 இல் நடை பெறமாட்டாது. 09.01.93 சனிக்கிழமை நடைபெறும் என்பதை யாவருக்கும் தெரியப்படுத்துகிறோம்.போட்டிகளில் பங்குகொள் ளும் சிறுவர்கள் கால நேரத்தோடு சமூகமளித்து போட்டி களையும், விழாவையும் நேரகாலத்தோடு நடாத்தி முடிக்க ஒத்துழைக்குமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

ஆசிரியர்
மண் சஞ்சிகை.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிறுவர் வட்டம்.

## சிங்கமும் தந்திரமுள்ள முயலும்.

ஒரு பெரிய அடர்ந்த காட்டில் மிருகங்களிற்கெல்லாம் ராசாவாக சிங்கம் ஒன்று வாழ்ந்து வந்தது அதே காட்டில் முயலும் வசித்து வந்தது.சிங்கத்திற்கு எல்லா மிருகங்களும் ஒவ்வொரு நாளும் முறையின் படி உணவு கொடுக்கவேண்டும்.

ஒரு நாள் அந்த முயலின் முறை வந்தது. அது எங்கு தேடியும் சிங்கத்திற்கு கொடுக்க உணவு கிடைக்கவில்லை.அதனால் கவலைப்பட்டுக்கொண்டு ஏக்கத்து யோசித்துக்கொண்டிருக்கும் பொழுது அதற்கு தந்திர மூளை வந்தது.அது பிற்பகல் ஆனதும் தன்னை யாரோ துாத்துவதுபோல் நடித்துக்கொண்டு சிங்கத்திடம் ஓடி வந்தது.

அதனால் அங்கு சிங்கம் பசியால் கர்ஜித்த வண்ணம் அங்கும் இங்குமாக அலைந்தது.அப்போ முயல் சிங்கத்திடம் ஓடி வந்து சிங்கராசாவே.சிங்கராசாவே நான் வரும் பொழுது உங்களைவிட பெரிய சிங்கம் ஒன்று என்னைத் துரத்தி வந்தது.நான் சிங்கத்திடம் அகப்படாமல் நீங்கள் பசியோடு இருப்பீர்கள் என்று ஓடித்தப்பிவந்து விட்டேன் என்றது

அதைக்கேட்ட மூளையில்லா சிங்கம் யார் அவன் என்னை எ பெரிய ராசா என்று கேட்டு கோபத்துடன் முயலுடன் சென்றது.முயல் ஒரு பாழுங்கிணறு ஒன்றைக் காட்டியது. சிங்கம் எட்டிப்பார்த்த போது தன் நிழல் தண்ணீர்க்குள் தெரிந்தது.முயல் சொன்னது உண்மையென நம்பி தன்னை விட பெரிய ராசா அந்தக்காட்டில் இருக்கக்கூடாது என்று சொல்லி உடனே அந்தக் கிணற்றுள் சிங்கம் குதித்தது. பின் அது மேலே வரவழியின்றி அதற்குள் இறந்து விட்டது. முயல் மிகுந்த சந்தோசத்துடன் தந்திரத்தால் உயிர் தப்பியது.

பிரதீப்–பிரான்சிஸ்.
KREFELD

www.tamilarangam.net

# அகம்பாவம் அழியும்

==========================

ஒரு ஊரில் முரளி,பரணி எனும் இரு நண்பர்கள் இருந்தார்கள்-இருவரும் இணைபிரியாத நண்பர்கள்-எங்கு சென்றாலும் ஒன்றாகவே செல்வார்கள்-படிப்பிலும் இரு வரும் கெட்டிக்காரர்-முரளி அடக்கமும் அமைதியும் உடை வன்.பரணி அதற்கு எதிர்மாறு. தான் படிப்பில் கெட்டிக் காரன் என்பதால் தன்னை மிஞ்சியவர்கள் யாரும் இருக்க முடியாது என்பதே அவனது எண்ணம்-இருவரும் அயல்க் கிராமத்தில் நடைபெறும் கோயில்த் திருவிழா ஒன்றிற்குப்போனார்கள்-போகும்போதுவழியில் ஒரு மா நிழலில் ஒரு வயோதிபர் அமர்ந்திருந்ததை கண்டார்கள்-முரளி அவ்வயோதிபரிடம் சென்று பெரியவரே உங்களிற்கு ஏதாவது உதவி தேவையா,ஏன் தனிமையில் அமர்ந்திருக் கிறீர்கள் எனக் கேட்டான்-அதற்கு அந்தப் பெரியவர் சொன்னார் தம்பி நான் வித்தை காட்டிப்பிழைப்பவன்.இரண் நாட்களாக சுகயீனம் காரணமாக வித்தைகாட்டப் போகவில்லை,அதனால்காசும் இல்லை,சாப்பாடும் இல்லை இன்றுநடக்கும் திருவிழாவில் வித்தைகாட்டி ஏதாவது சம்பாதித்தால் தான் சாப்பிடலாம் அதற்குத்தான் போக வேண்டும் என்னால் நடக்கவும் முடியவில்லை கையிலுள் பையையும்தூக்கவும் முடியவில்லை,யாராவது உதவி செய்தால்த்தான்திரு விழாவிற்குப் போகலாம் எனக்கூறினார் அதைக்கேட்ட முரளி பரணியைப் பார்த்து அந்தப்பையை வாங்கிக்கொள் நான் பெரிவரை அழைத்து வருகிறேன் என கூறினான். அதற்குப் பரணிதனது காலால் நடக்க முடியாத கிழவன் என்னவித்தை காட்டப்போகிறார் நீ விட்டிட்டுவா திருவிழாவிற்கு நேரமாகிறது என்று கூறி முன்னே நடந் தான்-முரளி பெரியவரின் பையை ஒரு கையில் எடுத்து பெரியவரையும் கைத்தாங்கலாக அழைத்து கொண்டு நடந் தான்-அங்கு ஒரு மா நிழலில் உட்காரவைத்து விட்டு மீண் டும் வருவதாகக் கூறி திருவிழாவில்க் கலந்து கொண் டான். மீண்டும் முரளியும் பரணியும் வந்த போது அந்தப் பெரியவர் வித்தை காட்டி முடித்து விட்டார்-அவர் முன் விரித்திருந்த துணியில் நிறையச்சில்லறையும் தாள்களும் கிடந்தன-அதைப்பார்த்து முரளி மிகவும் சந்தோசப் பட்டான்-

இந்தக்கிழவன் பாவமென திரு விழா பார்க்க வந்தவர்கள் தாராளமாகப்பிச்சை போட்டிருக்கிறார்கள் என்று பரணி முரளியிடம் கூறினான்-அதைக்கேட்ட பெரியவர்மனம் வருந்தினார்-பரணிக்குப் புத்தி புகட்ட எண்ணணி அவனைப்பார்த்து தம்பி நீ எனது வித்தையை ஏற்றுக்கொள்ளவில்லை அதனால் எனக்கும் உனக்கும் ஒரு போட்டி அந்தப்போட்டியில் நீ வெற்றி பெற்றால் நான் இன்றுடன்த்தொழிலை விட்டுவிடுகிறேன்-அதே போல் நீ தோல்வி அடைந்தால் எல்லாம் உனக்குத்தெரியும் எனும்

www.tamilarangam.net

எண்ணத்தை விட்டுவிடு எனக்கேட்டுக்கொண்டார்.அதற்கு ஒப்புக்கொண்ட பாணியை அருகில் அமரும்படி கூறினார். நான் இப்போ கண்ணை மூடிக்கொண்டு செய்யப்போவதை நீகண்ணைத் திறந்தபடி செய்ய வேண்டும் என்றார். பாணியும் அப்படியே செய்வதாகக் கூறினான். அத்தோடு திரு விழாவிற்கு வந்தவர்களை நோக்கி மகாசனங்களே 60வயது கிழவனுக்கும் 20வயது இளஞனுக்கும் போட்டி.எல்லோரும் திரண்டு வாருங்கள் என உரத்த குரலில் அறிவித்தான்.சனங்கள் எல்லாம் கூடி விட்டது.போட்டி ஆரம்பிக்கப்பட்டது. பெரியவர் இரு கண்களையும் மூடிக்கொண்டு இரு கைக ளில் மண்ணை எடுத்து கண்களின் மீது போட்டார்.பின் பாணியைப்பார்த்து கண்ணைத்திறந்தபடி அதைச் செய்யும்படி சொன்னார்.பாணியால் ஒன்றும் செய்ய முடியவில்லை.பொது ஜனங்களோ கூச்சலிட்டார்கள். சொன்னபடி பாணி தோல்வியை ஒப்புக்கொண்டு பெரிய வரிடமும் அங்கு கூடியிருந்தோரிடமும் மன்னிப்புக் கேட்டுக்கொண்டான்.அன்றிலிருந்து கற்கவேண்டியது அதிகம் இருப்பதை அறிந்து கொண்டான்.

''கற்றது கைமண் அளவு
கல்லாதது உலகளவு''

சிறீகௌரி—கிருஸ்ணபிள்ளை
3203,Sarstedt.

இம்மாதம் சிறுவர் கதைக்கான பரிசைப் பெறுபவர்:—

கி — சிறீகௌரி Sarstedt.

காதலி:— இந்த முறையும் அழகுராணிப்போட்டியில்
கலந்து கொள்ளலாமா டார்லிங் . . . .
காதலன்:— ? ? ? . . .
காதலி:— என்ன மௌனமாக இருக்கிறீர்கள் . . .
காதலன்:—ஒன்றுமில்லை உன்னை யாரும் காதலித்து
விடுவார்களோ.
அல்லது நீ யாரையும் காதலித்துவிடு வாயோ
என்று தான் யோசிக்கிறேன் . . . .

www.tamilarangam.net

# சிறுவனும் காகமும்.

சிறுவன் : காக்கையாரே காக்கையாரே எங்கேபோனீர்
காகம் : காணாத இடமெல்லாம் காணப்போனேன்.
சிறுவன் : கண்டு வந்த புதுமையை சொல்லக்கேளீர்.
காகம் : செட்டியார் வீட்டிற் கல்யாணம். சிவனார் கோவிலில் விழாக்கோலம். மீன்பிடித்துறை சனக்கூட்டம்.
மேரியின் வீட்டிற் கொண்டாட்டம் கண்டி[illegible] கம் குளிரோ கொடுமை. காங்கேசந்துறை[illegible] வெய்யிலோ கொடுமை.
சிறுவன் : அப்பா, மாமா கொழும்பில் அவர்கள் சுகத் அறிவீரா?
காகம் : பொங்கல் அன்று வருவாராம் புத்தகம் வாங் தருவாராம் பந்தும் கொண்டு வருவாராம். பாவையை உமக்குத் தருவாராம்.

த. கல்யாணி
7319 Dettlingen.

சிறுவன் :- காக்கையாரே காக்கையாரே எங்கே போனீர்
காகம் :- காணாத இடமெல்லாம் காணப் போனேன்.
சிறுவன் :- கண்டு வந்த புதுமைகளைச் சொல்லக்கேளீர்
காகம் :- குடிமனை எல்லாம் குண்டுமாரி கோவில்கள் எல்லாம் இடிகோலம் பாடசாலைகள் எல்[illegible] அலங்கோலம்.வடக்குப் பக்கம் பசியோ கொ[illegible] -மை. எல்லா இடமும் மரணமே கொடுமை.
சிறுவன் :- அப்பா அம்மா வெளிநாட்டில் அவர்கள் சுகத்தை அறிவீரா ?
காகம் :- அகதித்தமிழர் வருவாரோ ? சுகத்தைக்கண்டு விட்டனரோ .... புத்தகம் வேண்டவும் வரமாட்டார். காசை மட்டும் அனுப்புவாராம்.

*பா. சாளினி Ettlingen.*

www.tamilarangam.net

# வினாவிடைப்போட்டி முடிவுகள் 24
## மார்கழி 92

1] நோர்வே.
2] இமயமலை – இந்தியா.
3] 1948
1972
4] நீராடல்
வீட்டுமுற்றம்.
வருடப்பிறப்பு.
புண்ணியகாலம்.
பாடப் புத்தகம்.
5] கனி – காய்
மண் – விண்
பல – ஒரு (ஒன்று)
வீடு – காடு
சிறிது – பெரிது
ஏழை – பணக்காரன்
தொழிலாளி – முதலாளி
மலை – பள்ளம்
அடி – நுனி

சரியாக விடை எழுதியவர்கள் :-
5 கேள்வி :-
செல்வன் ஜனார்த்தஜ் வேலாயுதன் – Blieskastel
செல்வி சர்மிளா வரதராசா – Duisburg
" ரேகா தியாகேஸ்வரன் – Bochum
" தட்சாயினி சின்னராசா – Leverkusen

4 கேள்வி :-
செல்வி தர்சினி கமலநாதன் – Solingen
" நிரஞ்சனா செல்வராசா – Neuss
" லாவண்யா பாவேந்திரன் – Meerbusch
" தர்சிகா கந்தகுலம் – Krefeld

www.tamilarangam.net

,, பிரவீணா பொன்னுத்துரை - Hannover
,, றெசாந்தி பத்மநாதன் - Krefeld
,, தேவ அனுஸ்ரவா தேவராஜா - Siersburg
,, சுஜீவா சண்முகரட்ணம் - Hennef
,, ஜெயசுதா செல்வராசா - Bochum
,, ரூபி செல்வராசா - Bochum
,, ஜெனிற்றா அரியரட்ணம் - Dortmund
,, சுமித்திரா அழகராசா - Engelskirch
,, ஜசோதரா அழகராசா - Engelskirch
செல்வன் அன்ரன்விநோத் யோசப் - Osnabruck
,, பிரதாப் பிரான்சிஸ் - Krefeld
,, பிரதீப் பிரான்சிஸ் - Krefeld
,, செல்வரூபன் செல்வராசா - Bochum
,, மயூரன் அரியரட்ணம் - Dortmund
,, விஜேந்திரா அழகராசா - Engelskirch
,, நிரஞ்சன் செல்வராசா - Neuss
,, லிங்காதரன் கமலநாதன் - Solingen
சிவகுமார் சிவசுப்பிரமணியம் - Selm

இவர்களுக்கு மண் சஞ்சிகை பாராட்டுக்களை வழங்குகின்றது. இவர்களில் அதிஸ்டசாலியாகத் தெரிவு செய்யப்பட்டுப் பரிசைப் பெறுபவர் :-

செல்வி. சர்மிளா வாதராசா
4100 Duisburg



கள்வன் மனைவியிடம்:-என்னப்பா பிள்ளையளுக்கு நல்ல உடுப்பில்லையா
கள்வனின் மனைவி:-நீங்கள் இரவு வேலைக்குப்போய் எ... தனை நாளாச்சு

www.tamilarangam.net

வினாவிடைப்போட்டி 25 - ஜனவரி 1993.

1] உலகில் மக்கள் தொகையில் கூடிய நாடு எது ? எந்தக் கண்டத்தில் உள்ளது ?
2]உலகிலுள்ள பாலைவனங்களில் பெரியது எது ? எந்தக் கண்டத்தில் உள்ளது ?
3]இலங்கையின் மறு பெயர்களை எழுதுக ?
4]இலங்கை இனத்தவர் பேசும் மொழிகளை எழுதுக ?
5]ஜேர்மனியில் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்ற நகரங்களைக் குறிப்பிடுக ?

பிரித்து எழுதுக:-
இரும்புச்சத்து.
வாழைப்பழம்.
பந்தாட்டம்.
மண்ணெண்ணெய்.
தீப்பெட்டி.

ஒத்த கருத்துச் சொற்களை எழுதுக:-
விவசாயி.
அன்பு.
பாடசாலை.
நூலகம்.
வீடு.

முடிவு திகதி:- 25.02.93

தொடர்கதை அடுத்த மாத இதழில் தொடரும்.

www.tamilarangam.net

கண்டுபிடியுங்கள் முடிவு - 16

கண்டுபிடித்த சிறுவர்கள் :-

செல்வன். வரதருபன் இராமசாமி - Duisburg
" சதீசன் சோதீஸ்வரன் - Nurnberg
" விக்கி மகாதேவன் - Remscheid
" யோதீபன் யோகநாதன் - Haam
" அன்ரன் வினோத் யோசப் - Osnabruck
" சிந்துஜன் சிவகுமார் - Krefeld
" பிரதீப் பிரான்சிஸ் - Krefeld
" ஜனார்த்தஜி வேலாயுதன் - Blieskastel
" ராகவன் சிறீஜீவகன் - Kamen
" ராகுலன் " - Kamen
" நிரஞ்சன் செல்வராசா - Neuss
" விஜேந்திரா அழகராசா - Engelskirchen
செல்வி யூடிதர்சினி பெஞ்சமின் - Siersburg
" சுஜீவா சண்முகரட்ணம் - Hennef
" சன்யா சண் - Mulheim
" சுமதி சிவரட்ணராசா - Olsberg
" சிவானந்ததட்சாயினி சின்னராசா. - Leverkusen
" கல்யாணி தர்மலிங்கம் - Dettingen
" ரூபி செல்வராசா - Bochum
" லாவண்யா பாலேந்திரன் - Meerbusch
" ஜசோதரா அழகராசா - Engelskirchen
" பிரவீணா பொன்னுத்துரை - Hannover
" தர்சிகா கந்தகுலம் - Krefeld
" தர்சினி. கமலநாதன் Solingen

செல்வன் பிரசாந்தன் சிவராசா - Hess.Oldendorf

இவர்களுக்கு மண் சஞ்சிகை பாராட்டுக்களைத் தெரிவிக்கின்றது. அதிஸ்டசாலியாகத் தெரிவு செய்யப்பட்டு பரிசைப் பெறுபவர் :-

செல்வன். பிரதீப் பிரான்ஸ்சிஸ் Krefeld.

www.tamilarangam.net

# குறளும் பொருளும்

## 11. பிறனது இல்லாளை விரும்பாமை

உலகியலின் அறம், பொருளாகிய நெறிகளை அறிந்தவனிடம், பிறன் மனைவியை விரும்பும் அறியாமை இல்லை. 141

காமமாகிய பாவத்தில் நின்றவருள் பிறன் ஒருவனின் கடைவாயிலைப் பற்றி நின்றவர்களைப் போன்ற அறிவில்லாதவர் இல்லை. 142

தம்மை ஐயுறாதவர் மனையில் பாவம் செய்வதை விரும்புபவர் உயிருடையரேனும் இறந்தவரே ஆவார். 143

காம மயக்கத்தால் தினையளவும் ஆராயாமல் பிறருடைய இல்லத்தில் புகுதல் எவ்வளவு பெருமை உடையவராக இருந்தாலும், அப்பெருமை மதிப்பிழக்கும். 144

தனக்கு எளிதென்று கருதிப் பிறன் இல்லாளுடன் சேர்பவன் எந்நாளும் அழியாத பழியை அடைவான். 145

பிறர் மனைவியுடன் கூடுபவனுக்குப் பகை, பாவம், அச்சம், பழி ஆகிய நான்கு தீங்குகளும் ஒருகாலும் நீங்கா. 146

அறவழியில் இல்வாழ்க்கை நடத்துபவன் பிறன் மனைவியின் பெண்மையை ஒருகாலும் விரும்ப மாட்டான். 147

பிறன் மனைவியை மனதுள் நினைக்காத பேராண்மையே அறிவுடைய பெரியோருக்கு அறனும் சிறந்த ஒழுக்கமும் ஆகும். 148

பிறன் மனைவியின் தோளைச் சேராதவன் கடல் சூழ்ந்த இவ்வுலகில் எல்லா நன்மைகளையும் அடைவான். 149

ஒருவன் அறத்தின் எல்லையை அறியாமல் பல தீமைகளைச் செய்தாலும், பிறன் எல்லையில் நிற்கும் பெண்மையை விரும்பாதது நல்லது. 150

## குறளும் பொருளும்

141 – 150

சென்ற இதழில் வெளியான குறள்களின் சரியான விளக்கங்களைச் சுருக்கமாக எழுதியவர்கள்.

செல்வி. சிறீகௌரி கிருஸ்ணபிள்ளை

" பிரியா மகேந்திரநாதன்

செல்வன் பகீரதன் சிவலிங்கம்

திரு சுரேஸ் கந்தையா.

இவர்களுக்கு மண் சஞ்சிகை பாராட்டுக்களை வழங்குகின்றது. இவர்களில் அதிஸ்டசாலியாகத் தெரிவு செய்யப்பட்டு பரிசைப் பெறுபவர் :–

செல்வன் பகீரதன் சிவலிங்கம். Berlin

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# குறளும் பொருளும் —

## 12. பொறையுடைமை

அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை. 151

பொறுத்தல் இறப்பினை என்றும் அதனை
மறத்தல் அதனினும் நன்று. 152

இன்மையுள் இன்மை விருந்தொரால் வன்மையுள்
வன்மை மடவார்ப் பொறை. 153

நிறையுடைமை நீங்காமை வேண்டின் பொறையுடைமை
போற்றி ஒழுகப் படும். 154

ஒறுத்தாரை ஒன்றாக வையாரே வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து. 155

ஒறுத்தார்க் கொருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ். 156

திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்
தறனல்ல செய்யாமை நன்று. 157

மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்
தகுதியான் வென்று விடல். 158

துறந்தாரின் தூய்மை உடையர் இறந்தார்வாய்
இன்னாச்சொல் நோற்கிற் பவர். 159

உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லும்
இன்னாச்சொல் நோற்பாரின் பின். 160

குறளும் பொருளும்.

151 – 160
மேற்குறிப்பிட்ட குறள்களுக்குரிய விளக்கங்களை சுருக்கமாக எழுதி அனுப்பிவையுங்கள். சரியாக எழுதித் தெரிவு செய்யப் படும் அதிஸ்டசாலிக்கு பரிசு வழங்கப்படும்.

முடிவு திகதி :- 20.02.93

ஒருவர்:—என்னண்ணே மகள் வந்திட்டாவாம் என அறிஞ்சன்.
மற்றவர்:—பிள்ள சொல்லிச்சு சிங்கப்பூர் பாங்கொக் எல்லாம் காட்டிப்போட்டு அனுப்பினவர் நல்ல ஆளப்பா எண்டு சொல்லிச்சு.

www.tamilarangam.net

# அந்தஸ்து

ஆண் பெண் பேதமேன்?
ஆண் பெண் சிசுக்கள்
உற்பத்தியாவது ஒரே கருவறைதான்
ஆணுக்கு ஒரு கருவறை
பெண்ணுக்கு ஒரு கருவறை உயிரினத்தில் உண்டா?

அப்படியாயின் ஏன் மானிடத்தில்
ஆண் பெண் வேறுபாடு உதமாயிற்று?
ஆண்சிசு தங்கிய தாய்மையின்
கர்ப்பகாலம் பத்துமாதம்
அதேபோன்று
பெண் சிசு தங்கிய தாய்மையின்
கர்ப்ப காலமும் பத்துமாதமே
இப்படி இருந்துவிட்டு
ஆண் பெண்ணில்—பின்னர்
ஏற்றத்தாழ்வு உருவாவதேன்
ஆணுக்கொருநீதி பெண்ணுக்கொருநீதி
அரும்புகிறது நாட்செல்ல..நாட்செல்ல

பத்து வயதைத் தாண்டினால்
துள்ளித்திரிந்த சிறுமிக்கு
பாடபோதனைகள்,பதுமையாய் வீட்டிலிருப்பதற்கு
அதே வயதைத் தாண்டிய சிறுவனுக்கோ
எங்கேயும் வெளியே போய் வா!என

சுய அதிகார அமுல் நடவடிக்கைகள்...
குடும்ப அரசாங்கத்தால் வழங்கப்பட்டு
கௌரவமும் உயர்ந்தஸ்தும் கிடைக்கிறதே
இது நீதியா? நல்லசேதியா?

*விக்னா. பாக்கியநாதன். டோட்முண்ட்*

www.tamilarangam.net

# மதவேறுபாடு.

அங்கே ஒரு பெரும் யுத்தம் மூண்டு கொண்டிருந்ததுகாரணம் கருத்து - கொள்கை முரண்பாடு தான்.அவரவரும் தான் தான் கொண்ட எண்ணக்கருவே சரியானது.ஆதியானது. மகத்தானது.புனிதமானது என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருந்தனர்.தன் கருத்தை மறுக்கும் எவரையும் தாக்கும் அளவிற்கு மதம் பிடித்துப்போயிருந்த மதஸ்தர்கள் அவர்கள்.
ஒரு குழு அது ஒரு ''மேசை'' என்றது.அடுத்த குழு இல்லை இல்லை அது ''மேசய'' என்றது.இன்னொரு கும்பலோ அதுமேசையும் இல்லை ''மேசய''வும் இல்லை அது ''ரேபிள்'' என்றது.வேறொரு கூட்டமோ நீங்கள் சொல்வதெல்லாம்பிழை அது ஒரு ''ரிஸ்''என்றது.
- - - இப்படியே நீண்டுகொண்டேபோனது.தங்கள் முன் இருப்பது எனவென்பதில் தான் முரண்பாடு.
உண்மையில் அவர்கள் நடுவே துல்லியமாக நாலு மரக் கால்களின் மேலே ஒரு பலகை பொருத்தப்பட்ட ஒரு தளபாடமிருந்தது.அது மேசையா. மேசயவாரேபிளா,அல்லது ரிஸ்சா இதுதான் பிரச்சினை.மாரி,மேரி மரியாப்பிரச்சினையும் இப்படித்தானோ?
எந்த வேதத்திலும் எவருமே தமது பெயரால் மதத்தையுண்டாக்கும்படி சொல்லாதவிடத்தும் இப்படி ஒரு பிரச்சினை இன்னமும் ஓயவில்லை.
இதயே பாரதியும் -
பூமியிலே கண்டம் ஐந்து , மதங்கள் . கோடி:
புத்த மதம் சமண மதம்,பார்ஷி மார்கதம்
சாமியென யேசுபதம் போற்றும் மார்க்கம்
சநாதனமாம் ஹிந்து மதம் ,இஸ்லாம் ,யூதம்
நாமயர் சீனத்து ''தாவு'' பல முதலாப் பார்மேல்
யாமறிந்த மதங்கள் பல அளவாம் அன்றே:
யாவினுக்கும் உட்புதைந்த கருத்திங் கொன்றே.

குறிப்பு:-தனிமனித வழிபாடு சமுதாயமட்டத்திற்கு விரிவாக்கப்பட்டபோது ஏற்படுத்தப்பட்டதே சமயம். பூமியில் ஆங்காங்கே கூட்டம் கூட்டமாக வாழ்ந்த மக்களிடையே உருவான இச்சமய நெறிகள் அவ்வவிடத்து காலனிலை சமுதாய பண்பாடு,கலை கலாச்சாரம் மற்றும் பொருளாதார சூழ்நிலைகளின் அடிப்படையில் தோன்றியமையால் தம்மகத்தே முரண்பாடுகளை கொண்டிருப்பதில் ஆச்சரியப்படவோ அல்லது மோதிக்கொள்ளவோ தேவை என்ன இருக்கிறது?தேவையானது மதமே:எம்மதமும் சம்மதமே.

திருமதி.பி.க.தர்மினி
4005 மேயபன்.

www.tamilarangam.net

# குறுக்கெழுத்துப் போட்டி முடிவு

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| அ | னு | ரா | த | பு | ர | ம் |
| தி | ங் | X | ரி | ன் | ம் | த |
| கா | கு | மி | ம் | ள | க | த் |
| ர | X | கு | ள | கை | க் | ர் |
| ம் | ள | த | ச | ந் | ச | சூ |
| ள | X | கை | ரி | தி | ந் | மு |
| வா | ழ் | த் | து | ம | ளை | வி |

செல்வி. சத்தியப்பிரியா மகேஸ்வரம் – Bremen.
" சர்மிளா வரதராஜன் – Duisburg.
" நிரஞ்சனா செல்வராசா – Neuss.
" லாவண்ஜா பாலேந்திரன் – Meerbusch.
" சுகந்தினி மார்க்கண்டு – Krefeld.
" சுமதி மார்க்கண்டு – Krefeld.
" ரேகா தியாகேஸ்வரன் – Bochum.
" தட்சாயினி சின்னராசா – Leverkusen.

செல்வன் எஸ். சோதீஸ்வரன் – Nurnberg.
" எஸ். சண் – Mulheim.
" ஜனார்த்தஜி வேலாயுதன் – Blieskastel.
" பொன் விஜய் – Hannover.
" நிரஞ்சன் செல்வராசா – Neuss.
திரு ஜெ. பிரான்சிஸ் – Krefeld.
" வி. எஸ். சிவநாதன் – Selm.

www.tamilarangam.net

செல்வி சாந்தி செல்லத்துரை - Selm
திருமதி. எஸ். சிறீப்பிரியா - Sonsbech.
,, அருள்நிதி பாலச்சந்திரன் - Kerken.
,, நிவானி உதயகுமார் - Rheinberg.
,, பிரியா மகேந்திரநாதன். - Huckel Hove

இப்போட்டியில் கலந்து கொண்டயாவருக்கும் மண் சஞ்சிகை பாராட்டுக்களைத் தெரிவிக்கின்றது. இவ களில் அதிஸ்டசாலியாகத் தெரிவு செய்யப்பட பரிசு பெறுபவர் :-
செல்வி சத்தியப்பிரியா மகேஸ்வரன் Bremen.

34, 35 இலக்க குறுக்கெழுத்துப்போட்டிகளில் இடம்பெ தவறுகளைச் சுட்டிக்காட்டிய வாசகர்களுக்கு நன்றியை தெரிவிக்கும்வேளை நாம் விட்ட தவறுகளுக்கு மன்னிப் கோருகின்றோம்.

# அவன் செயலைச் செய்வான் அவனே

பிறந்து விட்ட மனிதரிலேவேற்றுமைகள் பல
நாளுக்கு நாள் பெருகிக் காட்டுகின்றாய்
பேசுவதை நன்றாகப் பேசுகின்றாய் - ஏன்
பொறாமை கொண்டிங்கு வாழ்கின்றாய்
பிறப்பதற்கும் இறப்பதற்கும் மண்தானென்றால்
மனிதனாகத்தான் நீயும் பிறந்தாயோ
பண்புடைய மனிதனாக மண்ணணில் வாழ்
மனிதப் பண்புகளைப் பண்புடனே கற்றுக்கொள்.

மெத்தத் தெரியுமென்று மற்றவரைத் தூற்றாதே
அத்தனையும் உனக்குரிய வாழ்தன்றோ
மக்கள் நலன் போதித்துமக்களையே பிரிக்கின்றாய்
தனியுடமைக்கொள்கை கொண்டு பொதுவுடமை பே
மகத்தான வேலைகளை மடக்கிக் குலைக்கின்றாய் [கின்ற
செய்யும் சேவையையும் தனியுடமை ஆக்குகின்றாய்
மனிதனை மனிதனாகப் பூமிதனில் வாழ விடு
அவன் செயலைச் செய்வான் அவனே.

பொ.சிறீ ஜீவகன்
Kamen.

www.tamilarangam.net

# குறுக்கெழுத்துப்போட்டி 36

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | X | | X |
| | | X | | | | |
| | | | | | | X |
| | | | | | | |
| | | | | | X | |
| | | | | | | |
| | | | X | | | |

இடமிருந்து வலம்

1–4 நம் கல்வி அறிவின் வள்ர்ச்சிக்கு இதுதான் ஆணி வேர்.

11–14 இந்தியாவில் இந்த விவகாரத்தில் இரு மதத்தவர் களின் பல உயிர்கள் வீணே பலியாகின்றன.

15–19 நம் பெரியோர்களுக்கு , நாம் இது செலுத் துதல் நன்று.

26–28 பூமிக்கு இப்படியும் ஒரு பெயர் உண்டு.

36–41 பாரதப் போரின் முக்கிய பாத்திரங்களில் இவனும் ஒருவன். [கு]

43–45 சரித்திர வரலாற்றில் ஆடைகளைந்து பழி தீர்த்ததாகக் கூறப்படுகின்றது . ஆடை இங்கு மறு வடிவில் உள்ளது. [வ–இ]

47–49 நம் நாட்டின் விடிவிற்காக உயிர் நீத்த அன்னை இவர்.

www.tamilarangam.net

# ''மண்'' சஞ்சிகையின் 3வது ஆண்டு
## நிறைவும் சிறுவர் கலை விழாவும்.

காலம் :- 09.01.1993 சனிக்கிழமை.
நேரம் :- காலை 10.00 மணி
இடம் :- GEMEINDE HAUS
SCHWABEN RUHR STR - 8
4100 DUISBURG - 12
* MEIDERICH



## நிகழ்ச்சி நிரல்.

பகல் 10.00 மணிக்கு சிறுவர்களின் பேச்சுப் போட்டி,கதை சொல்லல் போட்டிகள் ஆரம்பமாகும். 14.00 மணிக்கு கலை நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்.

* மங்கள விளக்கேற்றல்.
* மௌன அஞ்சலி.
* தமிழ் மொழி வாழ்த்து. - திருமதி. ஜெயராணி
* வரவேற்புரை [ தமிழ் + டொச் ]
* பிரதம விருந்தினர்கள் உரை :-
  [ செஞ்சிலுவைச் சங்க பிரதி நிதிகள். ]
  [ டியக்கோனி வேர்க்ஸ் பிரதி நிதிகள். ]
* ஓவியங்கள், சிறுவர் ஓவியங்கள், சஞ்சிகைகள், புத்தகங்களின் கண்காட்சி.
* சிறப்புரைகள் :-
  வணபிதா. பிரான்சிஸ் - ஜெயசேகரம் அடிகளார்.
  திரு. சி. சிறீபதி - தலைவர் தமிழ் மன்றம் பிராங்போட்.
  திரு. முத்துச்சொக்கன் - பாடசாலை முன்னாள் அதிபர்.
  திரு. தா. கனகலிங்கம் - தலைவர் டியுஸ்பேர்க் விளையாட்டுக் கழகம்.
  திரு.நா. கதிர்காமநாதன். செயலாளர் தமிழர் ஒன்றியம். - இராட்டிங்கன்.
  சஞ்சிகை ஆசிரியர்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

* பாடல் – டியுஸ்பேர்க் தமிழ்ப் பாடசாலை மாணவர்கள்.
* நடனம் – செல்வி. சந்திரா இரகுநாதன். [ முல்கைம் ]
செல்வி. மீரா இரகுநாதன். [ முல்கைம் ]
* பேச்சுப் போட்டிகளில் முதலிடம் பெற்றவர்கள்.
* நடனம் – டியுஸ்பேர்க் தமிழ்ச் சிறுமியர்.
* பரத நாட்டியம் – செல்வி. தட்சாயினி சின்னராஜா
[ லிவகூசன். ]
* வழக்காடு மன்றம் :-
தமிழர்களுக்கு அந்நிய மண்ணா ? தாய் மண்ணா ?
நிரந்தரமானது.
பங்கு கொள்வோர் :-
திரு. சீ. லோகநாதன். — NEUSS
திரு. சி. இராஜேஸ்வரன். — ELSDORF
திரு. பொ. சிறீஜீவகன். — KAMEN
திரு. ராஜன்முருகவேல். — LANGENFELD
திருமதி. யாழினி. தர்மகுமார். — MULHEIM
* நாடகம் – டியுஸ்பேர்க் தமிழ்ச் சிறுவர்கள்.
* இடைவேளை.
* பொது அறிவுப்போட்டி.
* விநோத உடைப்போட்டி.
* பரத நாட்டியம். – செல்வி. யாழரசி சந்திரபால்
சலங்கை ஒலி நாட்டிய கலா மன்றம். – டோட்முண்ட்.
* மேலைத்தேய நடனங்கள்.
* நாடகம் – டியுஸ்பேர்க் கலைஞர்கள்.
* நாடகம் – ''தாய் மண்'' இராட்டிங்கன் கலைஞர்கள்.
* பரிசளிப்பு வைபவம்.
* அதிஸ்டலாபச் சீட்டு.
* நன்றியுரை.

குறிப்பு :- பேச்சுப்போட்டி , கதை சொல்லல் போட்டிக
கலந்து கொள்பவர்கள் 10.00 மணியளவில் மன்
பத்திற்கு சமூகமளிக்க வேண்டும்.

www.tamilarangam.net

# விழா மண்டபத்தை அடையும் வழிகள்.

[1] Neuss, Krefeld -Auto Bahn 57 இல் வருபவர்கள் Auto Bahn 40 Duisburg நோக்கி வந்து Auto Bahn 59 Duisburg Hamborn Dinslaken, Wesel நோக்கி வரும் போது வலது பக்கம் Richtung - Ruhrort பக்கம் வெளியே வந்து முதலாவது சிக்னலில் வலது பக்கம் திரும்பி குறிப்பிட்ட இடத்திற்கு வரலாம்.

[2] Köln, Leverkusen, Auto Bahn 3 இல் வருபவர்கள் Duisburg நோக்கி வரும் போது Auto Bahn 40 Venlo எடுத்து Auto Bahn 59 Dinslagen, Wesel நோக்கிவரும் பொழுது வலது பக்கம் Richtung - Ruhrort பக்கம் வெளியே வந்து முதலாவது சிக்னலில் வலது பக்கம் திரும்பி குறிப்பிட்ட இடத்திற்கு வரலாம்.

[3] Dortmund, Hannover, Bochum, Essen பக்கம் இருந்து வருபவர்கள் Auto Bahn 42 இல் வந்து Auto Bahn 59 Duisburg Zentrum நோக்கி செல்லும் போது Ausfahrt - Ruhrort பக்கம் வெளியே வந்து முதலாவது சிக்னலில் வலது பக்கம் திரும்பி குறிப்பிட்ட இடத்திற்கு வரலாம்.

தொடர்பு முகவரி :-
V.SIVARAJAH
ANGERTALER STR.98
4100 DUISBURG .28
TEL. NO: 0203 / 706480

இந் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு எல்லோரையும் அன்புடன் அழைக்கிறோம். குறித்த நேரத்தில் நிகழ்ச்சிகளை நடாத்தி முடிக்க ஒத்துழைப்பு நல்குவீர்களென நம்புகின்றோம்.

நன்றி

— மண் சஞ்சிகை —
DUISBURG.

www.tamilarangam.net

3. Jahresfest der Zeitschrift "Man" (Erde) und Kinderkulturfest

Wann: Samstag, den 09.01.1993
15 Uhr

Wo: Gemeindehaus Schwabenruhr Str. 8,
4100 Duisburg - Meiderich

Programm

1. Eröffnungszeremonie
2. Schweigeminute
3. Eingangsmusik in tamilischer Sprache
4. Empfangsrede in Tamil und Deutsch
5. Ansprache der deutschen Ehrengäste
   - Herr Pasika,
   - Frau Spitzlei, beide DRK Duisburg
   - Herr Hans Joachim Mühlhaus, DRK Düsseldorf
   - Frau Regina Scheurer, Diakonisches Werk Dui
6. Ansprache der tamilischen Ehrengäste
7. Besichtigung der Kindermalereien und - kunstwerke
8. Theateraufführung, Gesang und Reden von Kindern
9. Religiöser Tanz
10. Quiz über Allgemeinwissen
11. Debatte
12. Kostümwettbewerb
13. Theater (Kabarett )
14. Preisvergabe und Ziehung der Lotterie
15. Musikprogramm (jeder kann sich hier beteiligen)
16. Westlicher Tanz

Kontaktanschrift:
V. Sivarajah
"Man" (Erde) Zeitung
Angertaler Str. 98
4100 Duisburg 28
Tel.: 0203 - 706480

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## மேலிருந்து கீழ்

1-21 மத்திய கிழக்கு [அரபு] நாடுகளில் சாதா ரணமாக இது காணப்படுகின்றது.

9-30 சில அப்பாவி மக்கள் கைது செய்யப் பட்டு இப்படியாக வைக்கப்படுகின்றனர்.

11-32 இது நம் தமிழுக்குச் சிகரமாகச் சொல் லப்படுகின்றது.

12-40 உடலின் ஆரோக்கியத்திற்கு இப்படியான பயிற்சி செய்தல் நன்று. [கு]

6-27 புலி இனங்களில் இதுவும் ஒன்று.[கீ-மே]

24-38 கால் நடைகளிற்கு ஏற்படும் நோய்களில் இதுவும் ஒன்று.

28-49 கற்பில் சிறந்த பெண்களை இப்படியும் அழைப்பர்.[கு]

31-45 இவள் ஒரு சினிமா நடிகை. [கு]

முடிவு திகதி 20.2.93

## யோசிக்க ஒரு நிமிடம்

மூன்று நண்பர்கள். அவர்களில் இருவர் சைக்கிள் ஓட்டுபவர். இருவர் கார் ஓட்டுவர். இருவர் ஸ்கூட்டர் ஓட்டுவர். சைக்கிள் ஓட்டத்தெரியாதவருக்கு ஸ்கூட் டர் ஓட்டத்தெரியாது. ஸ்கூட்டர் ஓட்டத்தெரியாதவர் கார் ஓட்டமாட்டார். எனின் எத்தனை பேருக்கு இந்த மூன்றுமே ஓட்டத்தெரியும்.

*விடை*

இரண்டு பேருக்கு கார் ஸ்கூட்டர் சைக்கிள் இந்த மூன்றுமே தெரியும்.

www.tamilarangam.net

# செய்தித் துளிகள்.



## இலங்கைச் செய்திகள்.

8.11.92 * வட பகுதியில் மலேரியா, வயிற்றோட்டம் வயிற்றுளைவு, நெருப்புக்காய்ச்சல் போன்ற நோய்கள் பரவி வருகின்றன.

8.11.92 * மலையக ஆடைத்தொழிற்சாலைகளில் தமிழ் இளைஞர், யுவதிகள் புறக்கணிக்கப்படுவதாக தெரிய வந்துள்ளது.

10.11.92 * மட்டக்களப்பு படுவான் கரையில் விடுதலைப் புலிகளின் 3 முகாம் அழிப்பு. 16 பேர் பலியாகியதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

12.11.92 * வடகிழக்கில் க. பொ.த சாதாரண பரீட்சைகள் டிசம்பர் 7 தொடக்கம் 17வரை நடைபெறவுள்ளது.

12.11.92 * இலங்கையில் 45 ஆயிரம் சிறுவர்கள் போதை வஸ்து பாவனையால் பாதிப்பு என பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது.

14.11.92 * அரசுக்கெதிரான மனித சங்கிலிபோராட்டம் சிறீ லங்கா சுதந்திரக் கட்சியினரால் நடாத்தப்பட்டது.

20.11.92 * செட்டிக்குளம் பகுதியில் புலிகளின் தாக்குதலில் 6 இராணுவத்தினர் பலியாகினர்.

23.11.92 * மூளாய் பகுதியில் செல்வீச்சு, அளவெட்டி, மானிப்பாய் பண்டத்தரிப்பு பகுதியில் குண்டுவீசப்பட்டுள்ளது.

28.11.92 * வவுனியாவில் இரு ஆடைத் தொழிற்சாலைகளை ஜனாதிபதி பிரேமதாசா திறந்து வைத்தார்.

30.11.92 * வட பகுதியில் எங்கும் மாவீரர்தினக் கொண்டாட்டங்கள் நடைபெற்றன.

02.12.92 * தமிழீழத்துக்காக போராடும் தமிழீழ விடுதலைப் புலிகள் சமாதானக் கதவுகளை மூடவில்லை. நாம் வன்முறை வெறியரல்ல . . .சமாதானத்தையே விரும்புகின்றோம். மாவீரர்தின உரையில் தலைவர் பிரபாகரன் உரை நிகழ்த்தியுள்ளார்.

03.12.92 * கட்டுப்பொத்த, வீரவில இராணுவ அரண்கள் மீது புலிகள் தாக்கியதில் 16 இராணுவம் பலி 41

www.tamilarangam.net

* 1981 ஆண்டு குடிசன மதிப்பின் படி வடகிழக்கில் 17 லட்சம் பேர் வாழ்ந்தனர். இவ் ஆண்டு அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றின் மதிப்பின் படி 9 லட்சம் பேர் மட்டுமே வாழ்கிறார்கள். யுத்தம் காரணமாக 3லட்சம் பேர் மேற்கு நாடுகளிலும், 2லட்சம் பேர் இந்தியாவிலும், வடக்கு, கிழக்கில் அகதிகளாக 3 லட்சத்து 50 ஆயிரம் பேரும் மேலும் யுத்த காரணமாக இறந்தவர்கள், காணாமல் போனவர்கள் 50ஆயிரம் பேருக்கு மேல் என்றும் இந்த மதிப்பீடு தெரிவிக்கின்றது.

06.12.92 * 1.1.92 – 31.11.92 காலவரையிலான [11 மாதம்] யுத்தத்தில் படையினர், போராளிகள், பொதுமக்கள் என 3412 பேர் உயிரிழந்துள்ளனர்.

* சாவகச்சேரி – நுணாவிலில் பதுங்கு குழி சிதைந்து இரு சிறுவர் பலி.

* கிளாலிக் கடற்பகுதியில் பிரயாணம் செய்த 8 பல்கலைக்கழக மாணவிகள் காணாமல் போய் விட்டதாக யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் கொழும்பிற்கு முறைப்பாடிட்டுள்ளார்.

10.12.92 * யாழ் குடா நாட்டில் லட்சம் பேர் வேலை இழந்துள்ளனர்.

உலகச் செய்திகள்.

08.11.92 * புதிய அமெரிக்க ஜனாதிபதி கிளின்ரன் நிர்வாகம் மூன்றாம் உலக நாடுகளுக்கு சாதகமாக செயற்படும் என அமெரிக்க கறுப்பின தலைவர் ஜக்சன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

* இன்னொரு பலஸ்தீனத்தை பொஸ்னியாவில் உருவாக்க முயற்சி. மேற்குலகுமீது ஈரான் குற்றச்சாட்டு.

12.11.92 * விடுதலைப் புலிகளுக்கு எதிராக இந்திய தென்னக மாநிலங்களான ஆந்திரா, கேரளா, கர்னாடகா, தமிழ்நாடு ஆகிய நான்கு மாநிலங்களும் கூட்டு நடவடிக்கை எடுத்துள்ளன.

14.11.92 * கர்னாடக முதல்வர் பங்காரப்பா தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

* ரஸ்ய விமான விபத்தில் 29 பேர் பலி.

www.tamilarangam.net

13.11.92 * இந்தியாவின் மாபெரும் புதல்வி என்ற பட்டம் திரேசாவிற்கு வழங்கப்பட்டது.

16-11.92 * தமிழகம், கேரளம் பகுதிகளில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் 143பேர் மரணமாகியுள்ளனர். ஆயிரக்கணக்கானோர் வீடுகளை இழந்துள்ளனர்.

20.11.92 * பாகிஸ்தான் எதிர்க்கட்சித்தலைவி பெனாசீர் பூட்டோ பொலிசாரினால் தாக்கப்பட்டுள்ளார்.

23.11.92 * அசாமில் குண்டு வெடிப்பு 40 பேர் பலி.

25.11.92 * சீன விமானம் நொருங்கி 131 பிரயாணிகள் பலி.

* ஜேர்மனியில் வசிக்கும் வெளிநாட்டவர்களில் துருக்கியரின் எண்ணிக்கை 18 லட்சமாகும்.

26.11.92 * காங்கிரஸ் அ. தி. மு. க உறவு முறிவு மத்திய அரசை எதிர்க்க ஜெயலலிதா முடிவு.

* ஈரானில் மனித உரிமை மீறல்கள் அதிகரிக்கப்பட்டுள்ளதாக ஐ.நா தாபனம் தெரிவித்துள்ளது.

29.11.92 * தேசியவாத முன்னணி ( நவநாஜிகள் ) என்ற இனவெறிக்கட்சிக்கு ஜேர்மன் அரசு தடைவிதித்துள்ளது.

04.12.92 * இந்திய அயோத்தி விவகாரநெருக்கடி அதிகரித்திருப்பதுடன் மத்திய மாநில அரசு நெருக்கடியும் அதிகரித்துள்ளது.

* உலகில் 164 நாடுகளில் 17 லட்சம் பேர் எயிட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக ஐ.நா சபை சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

05.12.92 * சென்னையில் நவம்பர் 17, 18, 19 திகதிகளில் உலகத் தமிழர் மகாநாடு நடைபெற்றது.

* இங்கிலாந்து மான்ஸ்சிஸ்ரர் நகரில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 38 பேர் பலி.

* சோமாலியாவிற்கு அமெரிக்க தலைமையில் சர்வதேச படைகள் அனுப்பப்பட்டுள்ளன.

08.12.92 * அயோத்தி விவகாரத்தில் பி. ஜே. பி கட்சித் தலைவரும் இந்திய எதிக்கட்சித் தலைவருமான அத்வானி தனது பதவியை இராஜினாமாச் செய்துள்ளார்.

உத்திர பிரதேச மாநில அரசும் ஜனாதிபதியால்

www.tamilarangam.net

* அயோத்தி விவகாரத்தில் பாகிஸ்த்தான், பங் காளதேஸ், ஈரான் , டுபாய், சவுதி அரேபிய நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளது.

* அத்வானி உட்பட கட்சித் தலைவர்கள் கைது.

09.12.92 * இன வன்முறைகளுக்கு எதிரான ஜேர்மனிய ஆர்ப்பாட்டங்களில் இதுவரை 11 வெளிநாட்டவர் கொல்லப்பட்டதுடன் 1500 பேர் தாக்குதலுக்குள்ளா கியுள்ளனர்.

* இந்தியாவில் இனவாத அமைப்புக்களை தடை செய்ய இந்திய அரசு முடிவு. இந்திய நகரங் களில் இடம்பெற்ற கலவரங்களில் 200 க்கும் அதிகமானோர் பலியாகியுள்ளனர்.

* இந்தோனேசியாவில் ஏற்பட்ட பூகம்பத்தில் 1584 பேர் பலி.

## அன்பான வேண்டுகோள்

மண் சஞ்சிகை தனது மூன்றாவது ஆண்டு நிறைவு வழாவை [illegible].01.93 இல் கொண்டாட இருப்பதை நீங்கள் அறிவீர்கள்.இவ்விழாவை நடாத்திமுடிக்க எமக்கு பல செலவீனங்கள் ஏற்படுகின்றது.(உணவு, பிரயாணம்,மண்டபவாடகை,ஒலி,ஒளி போன்றவை)

எமது சஞ்சிகை ஒரு இலவச வெளியீடாகும் எனவே எம்மிடம் நிதிவசதி இல்லாத காரணத்தால் அன்பர்கள், வாசகர் வியாபார தாபனங்கள் மற்றும் பொது நிறுவனங்கள்,மன்றங்கள், யாவரிடமும் நிதியுதவி கோருகின்றோம். நிதி உதவி புரிய விரும்பும் அன்பர்கள் கீழ்க்காணும் வங்கி விபரத் திற்கு பணத்தை அனுப்பிவைக்கவும்.

-நன்றியுடன் உங்கள் ஆதரவை எதிர்பார்க்கும்-

''ஆசிரியர்''

(மண்சஞ்சிகை)

**Duisburrg.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மாவீரர் தினம் 1992

மாவீரர் தினம் 29.11.92 இல் முன்ஸ்ரர் மாநகரில்மிகச்சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. ஜேர்மன் வாழ் தமழ் மக்கள் பல ஆயிரக்கணக்கில் பங்குகொண்டு நாட்டிற்காகத்தம்மை அர்ப்பணித்த தியாகச் செம்மல்களுக்குதமது இதய அஞ்சலியைச் செலுத்தி நினைவுகூர்ந்தனர். பலர் மண்டபத்தில் இடமின்றி வெளியே நின்று நிகழ்ச்சிகளைக் காதால் கேட்டு அஞ்சலி செலுத்த வேண்டியதாயமைந்தது குறிப்பிடத்தக்கது.மனதை வாட்டும் சோக இசை ஒலிக்க அனைத்து மக்களும் எழுந்து சிரந்தாழ்த்தி நிற்க விழா அமைப்பாளர் மக்கள் பிரதிநிதிகள் ஆகியோர் மேடையில் அமைக்கப்படிருந்த மாவீரர் தூபியான உறுதியின் உறைவிடத்திற்குதீபங்கள் வைத்து அஞ்சலிசெலுத்துவதுடன் விழாதொடங்கியது.

திரு. திலகர் தமிழீழத்தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்.

விழாவில மாவீரரை நினைவு கூரும் படியாகவும் தேசவிடுதலை பற்றியதாகவும் அமைந்த கவியரங்கம், நாடகம், நடனம் நாட்டிய நாடகம்,வில்லிசை உரைகள் ஆகியவை நடாத்தப்பட்டன. களத்தில்போர் புரியும் போராளிகளின் தியாகங்கள் மக்களின் நிலைமைகள் வெளிநாடுகளில் வாழும் மக்களின் கடைமைகள் என்பன கவியரங்கத்தில் சுட்டிக்காட்டப்பட்டன.

எம்மவர் பலரின் தமிழையும் நாட்டையும் மறந்த தன்மைகள், அநாவசியமோகங்கள் என்பனவும் காத்திரமான கவிதைகளில் சுட்டிக்காட்டப்பட்டு அனைவரும் தங்களின் பங்களிப்பின் மூலம் விடுதலைக்கு உதவ வேண்டுமெனவும் கேட்கப்பட்டனர்.

ஜேர்மனியில் வாழும் சிறந்த நாட்டிய மணிகளால் உருவாக்கப்பட்ட பல நடன நிகழ்ச்சிகள் நடைபெற்றன. களத்தில் கேட்கும் நிதர்சனமான கானங்களுக்கு எமது சிறு பிஞ்சுமங்கையர் அபிநயம் பிடித்து மக்களை மெய்மறக்கவும் பலரைக் கண் கலங்கவும் வைத்தனர். இந்நிகழ்ச்சிகளை தயாரித்த நாட்டிய மணிகள் மிகவும் பாராட்டுதற்குரியவர்கள்.

கவிஞர் காசியானந்தனின் ஆக்கம் ஒன்று நாட்டிய நாடகமாக அரங்கேற்றப்பட்டது. மக்கள் ஒன்றுபட்டு போராடுவதாலேயே விடுதலையை வெல்ல முடியும் என்பதனை உணர்த்தவும் மக்களின்சிறுவேற்றுமைகளை எதிரிகள் தூண்டி குழப்பங்களை ...

www.tamilarangam.net

நிப்பார்கள் என்பதையும் அற்புதமாகமாணவியர் நடித்துக் ணபித்தார்கள். இது பெற்றவரவேற்பு போன்றே வில்லிசை ம், நாடகமும் பார்வையாளரால் பெரிதும் வரவேற்கப்பட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் மத்திய குழு றுப்பினர் திரு. திலகர் ஜேர்மன் கிளை பொறுப்பாளர் திரு வநேசன் , விழாத்தலைவர் திரு. சிவநாதன் ஆகியோர் உரை ற்றினர். மக்களுக்காகத்தம்மை அர்ப்பணித்துமாவீரரின் அளப் ய தியாகமென்றும் இவ்வகையில் 5000க்கு மேற்பட்டமாவீரர் ர தம் இன்னுயிரை எமது தாயக விடுதலைவேள்வியில் அர்ப் ணித்துள்ளதாகவும் அம்மறவர்களின் குறிக்கோள் ஈடேற கடல் ந்த நாடுகளில் வாழும் தமிழ் மக்கள் தகுந்த பங்களிப்பை ங்கவேண்டுமெனவும் '2000 ஆண்டிலீழம் உலகப்படத்திலி க்கும் என பூகோள அறிஞர்கள் கூறியிருப்பினும் அதுவரை ாராடி பல மாவீரரை இழக்காமல் விரைவில் எமது ஈழத்தை றெடுக்க களத்தில் நின்று போராடும் போராளிகளுக்கும் ர்களுக்குத் துணையாக உள்ள தமிழ் மக்களுக்கும் ஜேர் ியில்வாழும் சகல தமிழ்மக்களும் அனைத்து உதவிகளையும் ாந்து செய்ய வேண்டுமெனவும் திரு திலகர் குறிப்பிட்டார். ளி மண்டபத்தில் ஈழத்தின் நிதர்சன நிலைமைகளை எடுத் காட்டும் புகைப்படக் கண்காட்சியும் இடம்பெற்றது. ஏராள ா மக்கள் இக் கண்காட்சியைப் பார்வையிட்டனர்.

பொ. விஜய
3000, Hannover.

## பெற்றோர்களே !

==============

நாடுவிட்டு நாடுவந்து வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழ்ச் சிறுவர்களின் கல்வி , கலாச்சார மேம் பாட்டுக்காக இப்போட்டிகளை நடாத்தவுள்ளோம். சிறுவர்களின் எழுத்தாற்றல் , வாசிப்பு பழக்கம் பேச்சுவன்மை,ஓவியம் வரைதல் என்பவற்றை அபி விருத்தி செய்து அவர்களை எதிர்காலத்தில் நல்ல பிரஜைகளாக்குவதே எமது நோக்கமாகும்.

எனவே இந்நோக்கத்தை நிறைவேற்ற பெற்றோர்களாகிய நீங்கள் பிள்ளை களைப்போட்டிகளில் பங்குபற்றச் செய்து எமக்கு ஒத்துழைப்பு வழங்குவீர்களென நம்புகிறோம்.

நன்றியுடன்

ஆசிரியர்
(மண் சஞ்சிகை)

www.tamilarangam.net

# # விழா நிகழ்ச்சிகள். #

## நத்தார் விழா - டியுஸ்பேர்க்.

வருடா வருடம் நடைபெறுவதுபோல் இந்த ஆண்டும் நத்தார் விழா டியுஸ்பேர்க் நகரில் சிறப்பாக நடைபெற்றது. சங் சகோதரி.மாக்கிறட் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவிற்கு ஜேர்மனியர்களுடன் துருக்கி,யூக்கோஸ்லாவியா, ஈரான், லெபனான், ஈராக், சோமாலியா, எத்தியோப்பியா, இலங்கை போன்ற நாடுகளைச் சேர்ந்த முன்னூறுக்கும் அதிகமானோர் கலந்து கொண்டனர்.

விழா நிகழ்ச்சியில் சிற்றுண்டி வழங்கப்பட்டதுடன் கலந்துகொண்ட நூறுக்குமதிகமான சிறுவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டது. இனங்களிடையே ஒற்றுமையை விலியுறுத்தி கத்தோலிக்க , இந்து, இஸ்லாம் பிரமுகர்களின் சொற்பொழிவும் இடம் பெற்றது. வெளிநாட்டுச் சிறுவர்களினால் நடன நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டது. இலங்கை தமிழ்ச் சிறுவர்களின் நடன நிகழ்ச்சி சபையோரை கவர்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

## 5வது ஆண்டு விழா - கிறீபில்ட்.

கிறீபில்ட் தமிழர் கல்வி நிலையத்தின் 5வது ஆண்டு நிறைவு விழா கடந்த 19.12.92 அன்று சிறப்பாக நடைபெற்றது. மங்கள வாத்திய இசை நிகழ்ச்சிகளுடன் ஆரம்பமான இவ்விழாவிற்கு ஐந்நூறுக்குமதிகமானோர் கலந்து கொண்டனர்

பரத நாட்டியம், நடனம், பேச்சுக்கள், மேலைத்தேய நடனம் என்பன இடம் பெற்றன.உலகத் தமிழர் கல்விச்சேவைத் தலைவர் நாகலிங்கம் அவர்கள் சிறப்புரை நிகழ்த்தி கடந்த வருடம் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு நற்சான்றிதள்கள் வழங்கினார்.

இவ் விழா நிகழ்ச்சிகள் முற்று முழுதும் தமிழ்ச் சிறுவர்வர்களினால் நடாத்தப் பட்டதாகும். அதாவது மேலைத்தேய பாடல்களுக்கும் பரத நாட்டியம் ஆடலாம் என்பதை சிறு

www.tamilarangam.net

வாகள் ஆடி நிருபித்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. ஒட்டு மொத்தத்தில் வெளிநாடுகளில் வாழும் தமிழ்ச் சிறார்களிடையே கல்வி, கலை, கலாச்சாரம் என்பன வளர்ந்து வருவது தெளிவாகின்றது. விழாவை ஒழுங்கு செய்த தமிழர் ஒன்றியத் தலைவர் திருநாவுக்கரசு அவர்களும், ஒன்றிய நிர்வாகிகளும் பாராட்டப்பட வேண்டியவர்களே !

# நத்தார் விழா – இராட்டிங்கன்.

இராட்டிங்கன் தமிழர் புனரமைப்பு ஒன்றியத்தினரின் நத்தார் விழா சென்ற 20.12.92 இல் சிறப்பாக நடைபெற்றது. ஒன்றியத் தலைவர் கே. அரசரத்தினம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவிற்கு முன்னூறுக்குமதிகமான மக்கள் கலந்து கொண்டனர். விசேட உரையை எ. ஜஸ்டின் அவர்கள் நிகழ்த்தினார்.

கலை நிகழ்ச்சியாக கிறிஸ்த்தவ பாடல், பரத நாட்டியம், மேலைத் தேய நடனம், பாட்டுக்குப்பாட்டு, நகைச்சுவை நாடகம் என்பன இடம் பெற்றன. தமிழ் பாடசாலை பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு நற்சான்றிதழ்களும், பரிசில்களும் வழங்கப்பட்டன. இறுதியில் டோட்முண்ட் ''சித்தாரா'' இசைக்குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சியும் இடம்பெற்றது.

இவ்விழாவில் நடைபெற்ற நகைச்சுவை நாடகங்கள் சரியான ஒழுங்குபடுத்தல், சரியான கதை வசனம் காணப்படாததாலும் சமகால நிகழ்வுகளுக்கு ஏற்றவையாய் அமையாத படியாலும், ஏன் இப்படிப்பட்ட நாடகங்களை மேடையேற்றி ஒன்றியத்தின் பெயரையும், தமிழர் எதிர்காலத்தையும் சீர்குலைக்கிறீர்களென பலர் பேசிக்கொண்டதை காணக்கூடியதாக இருந்தது. மேலும் விழாக்கள் நடைபெறும் போது விழா நடாத்துபவர்கள் இதை கவனத்திற் கொள்ள வேண்டும்.

தமிழ் வாலிபன் ஒருவன் மேலைத்தேய நடனங்களுடன் பரத நாட்டியம், சினிமாப் பாடல்களுக்கு நடனமாடி சபையோரின் பாராட்டைப் பெற்றுக்கொண்டான். அத்துடன் ''சித்தாரா'' இசைக்குழுவில் இடம்பெறும் 5 வயதுச் சிறுவன் சபையோர் கவரும் முறையில் தனது இசைக் கருவியைப் பயன்படுத்தி எல்லோரினதும் பாராட்டையும்,கவனத்தையும் ஈர்த்துக்கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும். விழா நிகழ்ச்சிகளை செயலாளர் திரு. நா. சுதிர்காமநாதான் தொகுத்தளித்தார்.

www.tamilarangam.net

# மூன்றாவது ஆண்டுவிழா
# யூச்சென் தமிழாலயம்

மேற்படி விழா 17.10.92 சனிக்கிழமை தனது மூன்றாவது ஆண்டு விழாவைக் கொண்டாடும் முகமாக நிகழ்ச்சி மாலைப்பொழுது ஆரம்பிக்கப்பட்டது

முதலாவது நிகழ்ச்சியாக ஜூச்சென் கரிதாஸ் நிறுவன அமைப்பாளர் திருமதி குக்ஸ் அவர்கள் மங்கள விளக்கேற்றி வைத்து நிகழ்ச்சியை மங்களமாக ஆரம்பித்து வைத்தார்.

தமிழாலய மாணவர்களால் கல்லூரி கீதம் இசைக்கப்பட்டது. வரவேற்புரையை திரு. சூரிய குமார் அவர்கள் தமிழிலும், செல்வன் பத்மநாதன் செல்வேஸ்வரன் ஜேர்மன் மொழியிலும் நிகழ்த்தினார்கள்.

அமரர் திருமதி கலாநிதி சூரியகுமார் அவர்களுக்கு அஞ்சலி செலுத்தி அபிநயநடனம் செல்வி வாணி அவர்களினால் நிகழ்த்தப்பட்டது. கல்லூரி ஆசிரியர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டது. மாணவர்களினால் மிருதங்க இசை நிகழ்ச்சி அரங்கேற்றப்பட்டது. மேலும் ''இதோ அடைக்கலம்'' என்ற இசையும் கதையும் நிகழ்ச்சியும் சிறுவர்களின் பாட்டுக்கள் நடன நிகழ்ச்சியுடன் விழா சிறப்புற நிறைவேறியது.

ஈழத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் யுத்த நிகழ்ச்சியை சித்தரிக்கும் வகையில் சிறுவர்களினால் வரையப்பட்ட

ஓவியக்கண்காட்சியும் இடம்பெற்றது.இவ் விழாவிற்கு தமிழ் மக்களும் சுற்று வட்டாரத்தில்வசிக்கும் இந் நாட்டவர்களும் சமூகம் கொடுத்து நிகழ்ச்சியைச் சிறப்பித்தனர்.

எம்.நவநீதன்
4053 ஜூச்சன்

---

அறிவில்லாதவனை உலகில் இருந்தான் என்றுதான் கூற முடியும். வாழ்ந்தான் என்று சொல்ல முடியாது.

o o o

எதுவும் அழகாக இருப்பதற்கு அது ஒழுங்காக இருப்பது அவசியம்.

o o o

தாய், தன் குழந்தையைப் பெறுவதற்குப் படும் பாடும் தானே அதன் தாய் என்ற நிச்சயமான உண்மையும்தான் அவள் குழந்தையிடம் அதிகப் பாசம் கொள்ளக் காரணம்.

www.tamilarangam.net

# வயதானவர்களுக்கு மறதி ஏற்படக் காரணம் என்ன?

வயதானவர்களுக்கு மூளைச் சுழற்சி நோய் தான் மறதிக்குக் காரணம் ஆகும். வயதானவர்களில் 25% மானோர் இந்நோயால் பாதிக்கப்படுகின்றனர். இந்நோய் மூளையிலுள்ள உயிரணுக்கள் பாதிக்கப்படுவதால் ஏற்படுகின்றது. இதனாலே இவர்களுக்கு ஞாபக மறதி ஏற்படுகின்றது.

தசைப்பிடிப்பு ஏற்படக் காரணம் என்ன?

சில நேரங்களில் எமக்குத் தசையில் சடுதியான பிடிப்பு ஏற்படுவதையும் அதனால் அவ்விடத்தில் நோவாக இருப்பதையும் உணருவீர்களல்லவா.. இது சடுதியான ஓய்வுக்குப் பின்னர் நாம் ஏதாவது ஒரு வேலை செய்யும் போ தசைகளின் திடீர் தொழிற்பாட்டால் தசைகளில் இலற்றிக் அமிலம் எனப்படும் இரசாயனப் பொருள் சேருவதால் ஏற்படுகின்றது. இதையே தசைப் பிடிப்பு என்கின்றோம். இதனை நீக்க பலமாகச் சிறிது நேரம் அவ்விடத்தில் உரோஞ்சினால் இலற்றிக் அமிலம் காபனீரொக்சைட் நீராக மாற்றப்பட்டு அவ்விடத்தை விட்டு நீங்குவதால் இது குணமடையும், நோ இல்லாமற் போகும்.

திருமதி நகுலா சிவநாதன்
4714SELM

# அலர்ஜி என்பது என்ன?

சில பொருட்களை உடல் ஏற்றுக்கொள்ளாமல் இயல்பிற்குமாறாக உடல் புலப்படுத்தும் உணர்வுகள் தான் அலர்ஜி எனப்படுவது.ஒவ்வாமை என்றும் இதைக் கூறுவார்கள்.சில பொருட்கள் பொதுவாக தீங்கிழைக் காதவை.இறகு,தூசி,மகரந்தத்தூள்.சில உணவுகள் மருந்துகள் போன்ற இப்பொருட்கள் அலர்ஜி எனப்படும்.ஒருவருக்கு ஒவ்வாத பொருள் இன்னொரு வருக்கு ஒவ்வாமலிராது.ஒவ்வாப்பொருளை ஒருவர் அணுகும் போது தும்மல் இருமல்,வாந்தி போன்றவை வரலாம்.உடலில் தடிப்புகளேற்படலாம்.சில விளைவுகள் ஒருசில மணி நேரமே இருக்கும்.வேறு சில பல நாட்கள் நீடிக்கும்.ஆஸ்த்மா எக்சிமா போன்ற நோய்கள் ஒவ்வாமையால் வருபவை.அலர்ஜி பாரம்பரை இயல்பாகவுமிருப்பதுண்டு.இரத்ததில் சேரும் அன்னியப்பொருட்களைத்தாக்கி அழிக்க உடலில் எதிர்ப்பொருட்கள் உண்டாகின்றன. இத்தாக்குதல் நடைபெறும் போது உடலில் ஏற்படும்மாற்றங்களே அலர்ஜியாகும்.

கயன்
4100 டியுஸ்பேர்க்.

www.tamilarangam.net

# ஐரோப்பிய தமிழ் வாசகர் வட்டம்
# EUROPE TAMIL READER CIRCLE
# (E.T.R.C)

ஐரோப்பிய நாடுகளில் வாழுகின்ற தமிழ் மக்கள் மத்தியில் நாளுக்கு நாள் பல சஞ்சிகைகள், பத்திரிகைகள் பெருகி வருவதை யாவரும் அறிந்த ஒன்றுகும்.இதில் பல சஞ்சிகைகள்,பத்திரிகைகள் எமது தமிழ் மக்களை நேர்வழிகளில் தமிழ் மரபுப்படி நல்ல தரமான ஆக்கங்களையும்,கருத்துக்களையும் எமது தமிழ் வாசக அங்கத்தவர்களுக்கு கொடுத்து வருவதை பாராட்டத்தான் வேண்டும் இதேவேளை ஒரு சில பத்திரிகைகள்,சஞ்சிகைகள் எதுவிதமான நல்ல கருத்துக்களையோ நல்ல ஆக்கங்களையோ வெளியிடாமல் மக்களை குழப்பமடையச் செய்யும் தவறுன வழிகளில் இட்டுச் செல்லும் கருத்துக்களையும்,செய்திகளையும்,ஆக்கங்களையும் வெளியிட்டு தாங்களும் ஒரு பத்திரிகை,சஞ்சிகை என்ற போர்வையில் நடமாடுகிறது.இப்படிப்பட்ட பத்திரிகை,சஞ்சிகைகளை தமிழ் வாசகர்களுக்கு இனம் காட்டவேண்டிய கடமை இந்த வாசகர் வட்டத்திற்கு ஏற்பட்டுள்ளது.

எனவே ஐரோப்பிய தமிழ் வாசகர் வட்டம் மூலம் ஒவ்வொரு பத்திரிகை அல்லது சஞ்சிகை வாசகர்கள் விமர்சனத்திற்கு விடப்பட்டு வாசக அங்கத்தவர்களிடம் கருத்துக் கணிப்பீடு நடாத்தப்பட்டு அதிக புள்ளி பெறும் பத்திரிகை,சஞ்சிகை ஐரோப்பிய நாட்டில் தரமான தமிழ் பத்திரிகை,சஞ்சிகை என இனம் காட்ட எமது வாசகர் வட்டம் முடிவு செய்து உள்ளது.எனவே சகல பத்திரிகை,சஞ்சிகை வெளியீட்டாளர்கள் இதற்கு ஒத்துழைப்பு வழங்குவதுடன் தங்கள் பிரதிகளையும் அனுப்பிவைக்கும்படி தழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

அத்துடன் இதுவரை வாசகர்களுக்கு என ஒரு அமைப்பு இல்லாத குறையை இவ்வாசகர் வட்டம் பூர்த்தி செய்கிறது.ஆகவே இதில் அங்கத்துவம் பெற விரும்பும் அனைத்து வாசகர்களும் கீழ்க் காணும் எமது வட்ட முகவரிக்கு தொடர்பு கொண்டு அறிவதற்கு உங்கள் முழுப்பெயர்,சொந்த நாட்டு முகவரி,தற்போதய முகவரி,பிறந்த திகதி,ஆர்வமான துறைகள் என்பவற்றை அனுப்பி வைக்கவும்.

அனுப்பவேண்டிய முகவரி:-

1) E.T.R.C
NIKOLAI STR 11,
5790,BRILON,
GERMANY.

2) E.T.R.C
SETTMECKER . Str. 90
5768 SUNDERN
GERMANY

EKK
இங்கனம்
வட்டக்குழு

www.tamilarangam.net

## ⁕ நன்றியும் வாழ்த்துக்களும். ⁕

நத்தார், புதுவருட, தைப்பொங்கல் வாழ்த்துக் களை எமக்கு அனுப்பிவைத்த வாசகர் களுக்கும் , இலங்கையில் இருந்து வாழ்த்துக்கள் அனுப்பிய அநாதைச் சிறுவர் இல்லங்களுக்கும் எமது உள்ளங் கனிந்த நன்றியையும் நத்தார், புது வருட, தைப்பொங்கல் வாழ்த்துக்களை யும் தெரிவிக்கின்றோம்.

– மண் சஞ்சிகை –

## வாசகர் கடிதம்.

அன்புடையீர்,
தங்களின் ''மண்'' ஆரம்பத்தில் இருந்து படித்து வருகின்றேன். கலை இலக்கிய சமூக இதழ் என்று இல்லாமல் அத்துடன் அநாதை சிறுவர் நிதி மூலம் எமது மண்ணில் கஸ்ரப்படும் சிறுவர்களுக்கு ''மண்'' சஞ்சிகை மூலம் நிதி சேர்த்து பட்டியல் போட்டு அனுப்பிக் கொண்டு இருக்கிறீர்கள். தொடர்ந்தும் இந்த ஆண்டு போல் அடுத்த வருடமும் கூடுதல் நிதிசேர்த்து தங்கள் பணி தொடர வேண்டும் என நாங்களும் மண் சஞ்சிகைக்கு நன்றியைத் தெரிவிக் கின்றோம். ''வளர்க தமிழ் பணி''

நன்றி.
இப்படிக்கு
ஆர்.தர்மலிங்கம்.

ஒரு சிலருடைய நன்மைக்காக, வெறிபிடித்தலையும் பலரைக் கொண்ட கூட்டம் தான் கட்சி.

o o o

பழைமை அழிவதைப் பொறுத்தே புதுமை மலர்வது இருக்கும்.

o o o

பொறுமை என்பது கசப்பான் செடிதான், ஆனால் அது தரும் கனிகள் சுவையானவை.

o o o

# அநாதைச் சிறுவர் நிதி.



* இதழ் 36 மார்கழி 30.11.92 இல் கையிருப்பு - 536.65
* 1992 மார்கழி அன்பளிப்பு இல்லை - --

31.12.92 இல் கையிருப்பு 536.65

யாழ் மாவட்டத்தில் பெரும் தொகையான அநாதைகள், அகதிகள் பசிபட்டினியால் மடிந்து வருவதாகவும் மழைக்காலமானதையால் அகதிகள், அநாதைகள் குடியிருப்புகளுக்கு பல சேதமேற்பட்டுள்ளதாகவும் உடுப்பு, மருந்துப்பொருள், எரிபொருள்களுக்கு பலத்த தட்டுப்பாடு நிலவுவதாகவும்,தொற்று நோய்கள் பரவி வருவதாகவும் மக்கள் பெரும் துயருடன் வாழ்வதாகவும் யாழ் மாவட்ட அரச அதிபரின் அறிக்கை ஒன்று தெரிவிக்கின்றது.

எனவே இத்திட்டத்திற்கு உதவி புரிய விரும்புபவர்கள் எமக்கு நிதி உதவி புரிந்தால் நாம் எல்லாவற்றையும் சேர்த்து அனுப்புவோம். விரும்பியவர்கள் எமது வங்கிக் கணக்கிற்கு பணத்தை அனுப்பி வைக்குமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

முகவரி :-

VYRAMUTHU SIVARAJAH
STADT SPARKASSE DUISBURG
KONTO NO - 225000215
BANK ZHAL 35050000

---

நிகழ்காலப் புயல்களையே தாங்கக் கூடியதாக உடல் இருக்கிறது. ஆனால் மனம் கடந்த, நிகழ்கிற, வருங்காலப் பிரச்னைகளையும் தாங்கக் கூடியது.

o o o

மனதை நல்ல வழியில் செலுத்தத் தெரியாதவனுக்கு அதுவே அபாயமான ஆயுதமாக விடுகிறது.

o o o

www.tamilarangam.net

## இந்திரா என்ற யானை

நேரு பிரதமராக இருந்த போது, ஜப்பான் நாட்டுக் குழந்தைகள் தங்களுக்கு ஒரு யானை வேண்டுமென்று அன்புக் கோரிக்கை விடுத்து ஒரு கடிதம் எழுதினார்கள். நேரு மனம் நெகிழ்ந்து போய் யானைகுட்டி ஒன்றை பரிசாக அனுப்பி வைத்தார். அதற்கு நேரு வைத்த பெயர் இந்திரா. அந்த யானை கடந்த 84ம் ஆண்டு அக்டோபர் மாதம் 31ம் தேதி எதிர்பாராத விதமாக ஜப்பான் மிருகக் காட்சி சாலையில் இறந்து விட்டது. ஜப்பான் நாட்டு பத்திரிகைகளில் இந்திரா மறைந்து விட்டது என்று சிறியதாக அறிவிப்பு வெளியாயிற்று. ஆனால் அந்த நாட்டு பத்திரிகைகளின் முன் பக்கத்தில் இடம் பெற்ற முக்கிய செய்தி என்ன தெரியுமா ?

இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி சுட்டுக் கொல்லப்பட்டார். ஆமாம் பிரதமர் இந்திரா காந்தியும், இந்திரா என்ற யானையும் மறைந்தது ஒரே நாளில் தான்.

திருமதி. ரோகிணி இரட்ணசிங்கம். Bitburg.

---

## சுவிஸ்லாந்தில் அகதிகள் அந்தஸ்த்து கோரியுள்ள தமிழர்கள் தொகை.

1982 – 109
1983 – 845
1984 – 1236
1985 – 2764
1986 – 593
1987 – 893
1988 – 1516
1989 – 4809
1990 – 4774
1991 – 7349
1992 – 2060 [ஆகஸ்ட் வரை]

[ வீரகேசரியில் இருந்து. ]

www.tamilarangam.net

**TAMIL REFUGEES HUMAN RIGHTS AND WELFARE COMMITTEE**
**(FEDERAL REPUBLIC OF GERMANY)**

c/o Poopal Somasundaram - ~~Seuferstraße 57~~ WALDBURG STR-12 - 5300 Bonn 2 - Tel.: 0228/318568

Mr. V. Sivarajah
ANGARTALAR STR-98,
4100-DUISBURG-28,

12-செப்டெ-1992

அன்புடையீர்!

வணக்கம் பல.

01.10.1992 முதல் எனது தொலைபேசி இலக்கம்:0228 /318568 இது எனது அலுவலகத்தில் இருப்பதால், தயவு செய்து தொலைபேசித் தொடர்புகளைப் பின்வரும் நேரங்களுக்கிடையில் வைத்துக்கொள்ளவும்.

* காலை 9.30 முதல் நண்பகல் 1.30 மணி வரை,
* மாலை 4.00 மணி முதல் இரவு 9.30 மணிவரை மட்டுமே.

நான் இல்லாத வேளையில் பதிவு நாடா செயற்படும்.ஏதாவது அவசர தேவைகள் இருந்தால், தெளிவாக அதிற் பதிவு செய்து விடுங்கள்.

நேரடியாகத் தொடர்புகொள்ள விரும்புவோர் முன்கூட்டியே தொலைபேசியிற் கதைத்து ஒழுங்கு செய்த பின்பே வந்தால் ஏமாற்றத்தைத் தவிர்த்துக் கொள்ளலாம்.ஏனெனில் திங்கள் வியாழன்.வெள்ளி ஆகிய நாட்களிலே.நான் காலை நேரங்களில் தொழிற்கல்வி பெறுவதற்காகவெளியூர் சென்றுவிடுவேன்.

பெரும்பாலும் மாலை நான்கு மணிக்குப் பின்பு சந்திப்பதே விரும்பத்தக்கது.
உங்கள் ஆதரவுக்கு நன்றி.

வணக்கம்
இங்ஙனம்
தங்கள் உண்மையுள்ள
பூபால் சோமசுந்தரம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# Deutsch-Tamilischer Freundschaftkreis

## ஜேர்மன் தமிழ் மனிதநேயக் கழகம்

(அகதிகள் அநாதைகளுக்கான உதவி)

## German Tamil Association

HAUSER RING 6.
4030 RATINGERN _ 1
GERMANY

Prasident
N.KATHIRGAMANATHAN

Secretary
K.PUSPAKANTHAN

Treasurer
Annitte Fassbender

Asst. Sceretary
Mrs. Kosalya Sornalingam

Committee Members
*Rajan Murugavel
*P.Srijeevakan
*V.Sivarajah
*SinnaRajeswaran
*K.Rosemary
*S.Kosalya
*M.Veni
*P.Sivaranjan

| வரவு | வரவு |
|---|---|
| 1) அங்கத்துவப் பணம்...................... | 170.00 |
| அன்பளிப்பு/நன்கொடை | 50.00 |
| கலைவிளக்குச் சஞ்சிகை (டோற்முண்ட்).. | 620.37 |
| மனிதவுரிமைக் கழகம் (டோற்முண்ட்)... (Herrn.Markmann Klaus) | 500.00 |
| கலைநிகழ்ச்சி (இரங்கும் கலைமாலை )... (20.6.92 டோற்முண்ட்) | 3775.00 |
| மொத்தம்................................ | 5115.37 |

| செலவு | செலவு |
|---|---|
| இலங்கைக்கு ஒன்பது அநாதை இல்லங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது விபரம்... | 500x9 |
| 1) ஸ்ரீபரமானந்தா இல்லம்.................... | 500.00 |
| 2) ஜெய்ப்பூர்கால் தொழிற்சாலை(யாழ்ப்பாணம்) | 500.00 |
| 3) அன்பு இல்லம் (திருகோணமலை).......... | 500.00 |
| 4) காந்தி நிலையம் (உருத்திரபுரம்).......... | 500.00 |
| 5) ஞானசம்பந்தர் இல்லம் (மானிப்பாய்)....... | 500.00 |
| 6) அறவழிப்போராட்டக்குழு (சாவகச்சேரி)..... | 500.00 |
| 7) குருகுலம் (கிளிநொச்சி).................. | 500.00 |
| 8) ஸ்ரீசண்முகா மகளிர்இல்லம்(திருகோணமலை | 500.00 |
| 9) கருணாநிலையம் (கிளிநொச்சி)............ | 500.00 |
| வங்கிக் கட்டணம்.....23x9 ................ | 207.00 |
| இரங்கும்கலைமாலைச் செலவு.............. | 405.00 |
| மொத்தச் செலவினங்கள்...................... | 5112.00 |
| மிகுதி.................................. | 3.37 |

Annitte Fassbender 2.10.92 ______ [signature] ______

பொருளாளர்
திகதி

தலைவர்
திகதி

www.tamilarangam.net



"கலைஞர்கள் சந்திப்பு" என்றொரு நிகழ்ச்சியை ஐரோப்பிய நாட்டிலே முதன்முதலாகச் சிந்தித்து, பாரிஸ் ஈழநாடு ஆதரவில், பிராங்பேட் நகரத்தில் நிறைவேற்றியவர் திரு. சிவனடியான் ஸ்ரீபதி அவர்கள். தாயக அகதிகள் புனர்வாழ்வில் அதிக அக்கறை காட்டிவரும் இவருடைய சேவை பாராட்டப்பட வேண்டியதொன்றாகு. 17.10.92 அன்று நடைபெற்ற கலைஞர்களின் சந்திப்பில் "கலைக்காவலர்" என்ற பட்டம் சூட்டப்பட்டுக் கௌரவிக்கப்பட்ட இவரை நாமும் வாழ்த்துகிறோம். இவருடைய செயற்பாடுகளால் சேவைகளால் என்றென்றும் எல்லோர் மனத்திலும் நிலைத்து நிற்பார்.

வளரட்டும் இவரது பணி!

திரு. சிவனடியான் ஸ்ரீபதி – பிராங்போர்ட் தமிழ்மன்றத் தலைவர்,

# விளையாட்டுச் செய்திகள்.

### காம்.

காம் விளையாட்டுக் கழகத்தினரால் சென்ற 19.12.92 அன்று 6 பேர் கொண்ட உதை பந்தாட்டப் போட்டி நடாத்தப்பட்டது. இதில் பல விளையாட்டுக் கழகங்கள் பங்கு கொண்டன. இப்போட்டியில் முதலாவது இடத்தை டியூரான் அணியும், இரண்டாவது இடத்தை மு.கிளப்பாக் அணியினரும், மூன்றாவது இடத்தை கிறீபீல்ட் அணியும் பெற்றனர். இப்போட்டியை ஏராளமான மக்கள் கண்டுகழித்தனர்.

### டோட்முண்ட்.

சென்ற 19.12.92 டோட்முண்ட் நகரில் நடைபெற்ற 6 பேர் கொண்ட உதை பந்தாட்டப் போட்டியில் ஏழுவிளையாட்டுக் கழகங்கள் பங்கு பற்றின. இறுதி முடிவில் பிலபீல்ட் அணி முதலாவது இடத்தையும் முல்கைம் அணி இரண்டாவது இடத்தையும்பெற்றனர்.

G.Gajan



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மண் ஆசிரியர்கள்
V.SIVARAJAH / P.SRIKARARAJAH
''மண்'' சஞ்சிகை தொடர்பான சகல கடிதத் தொடர்புகளுக்கும்:

Mr. V. Sivarajah
Angartalar-Str. 98
4100 Duisburg - 28
West Germany
Tel. No. 0203-706480

ஆக்கங்களின் திருத்தம் ஆசிரியர் குழுவிற்குரியது.

வாழ்க்கையை வளமுள்ளதாக ஆக்கிக் கொள்ளும் முயற்சியே கல்வி என்பதாகும்.

''வில்மோட்''

கல்வி என்பது ஒருவன் அறியாத பொருளை அறிய வைப்பதல்ல! ஒருவனுக்குத் தெரியாத பண்புகளைத் தெரியவைப்பது தான் கல்வியாகும்.

''ரஸ்கின்''

வட்டிக்கு விடும் பணத்தை விடக் கல்விக்குச் செலவழிக்கும் பணம் நிட்சயம் அதிகமான வருவாயைத் தரும்.

''பிராங்கிளின்''

ஒருவன் தன்னுடைய தாய் மொழியை நன்கு உணர்ந்து பேசி படித்து எழுதக் கற்றுக் கொள்ளச் செய்வதே கல்வி என்பதாகும்.

''எச்.ஜீ.வெல்ஸ்''

முட்டாள்கள் கூட தேர்வில் தேறிவிடுகின்றார்கள். எனவே ஒருவனுடைய பட்டங்களை வைத்துக் கொண்டு அவனுடைய அறிவைக் எடை போட முடியாது.

''இ.எச்.ஜான்சன்''

ஆணியும் ஊசியும் செய்வதாக மனிதன் கல்வி கற்பதல்ல! மனிதன் மனிதனாக வாழ்வதற்குத் தான் கல்வி கற்றுக் கொள்ளுகின்றான்.

''சானிங்''

நாட்டு மக்களுக்கு கல்வி கற்பிக்கவேண்டும் என்பது தான் அரசாங்கத்தின் முதற் கடமையாக இருக்கவேண்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ERDE

Tamilisches Magazin für Kultur, Literatur und Soziales

## வருங்காலங்கள் வரையட்டும்




இவ்விதழ் தொடர்ந்து மலர மனமுவந்த டியக்கோனி, செஞ்சிலுவை அமைப்பினருக்கு நன்றிகள்

Für die Freundliche **Unterstützung** bei der Herstellung dieses heftes danken Wir dem Diakonischen Werk und Deutsche Rote Kreuz.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்